ஆத்தா பால் வாசம் அன்னைக்கே மறந்திடுச்சே
எங்கண்ண உன் தோள் பாசம் இன்னும் தான் மறக்கலயே

பூட்டி வைச்ச மேற் கதவ பொசுக்கெண்ணுதான் திறந்திடுங்க
உங்க பொன்னான கட்டளைக்கு புயலாகி நாங்க வாறோம்

சாத்தி வைச்ச மேற் கதவ சட்டெனுதான் திறந்திடுங்க
உங்க அன்பான கட்டளைக்கு அம்பாகி பாஞ்சு வாறோம்

பாலமர நிழலு வந்து எங்கள பாச மா வருடதண்ணா
உங்க நேசமான நினைப்பு வந்து நிசமாவே உலப்புதண்ணா

இன்னைக்கு உங்க பிறந்த நாளு கூட நாங்க இல்லையேண்ணு
குறையாக நினைக்காதிங்க ஒங்க நிழலாக இருப்போமுங்க

உருலகம் எல்லாமே அண்ண உங்களோடும் பேச்சாக
உங்களை சுத்தி நிற்கும் காக்கையுன்தான் சுத்த சென்சு மூச்சாவோ